# <u>சட்டப் பேரவை விதி 110—ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4.4.2007 அன்று படித்தளித்த அறிக்கை</u>

2007—2008ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் குறைத்து, இந்தியாவிலேயே மிகக் குறைவான விலையில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி வருகிறோம். இதன் காரணமாக, கடந்த பத்து மாதங்களாக வெளிச்சந்தையில், அரிசியின் விலை உயராமல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இதுபோன்றே, பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தி, ஏழை, நடுத்தரக் குடும்பங்களைப் பாதுகாக்கும் உடனடி தற்காலிக நடவடிக்கையாக, அப்பொருள்களை அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொதுமக்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது." என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினையொட்டி, தற்போது பாமாயில், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, ரவை, மைதா ஆகிய உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்து, நியாய விலைக்கடைகள் மூலமாக விநியோகம் செய்யும் திட்டம் தமிழ்ப் புத்தாண்டு நாளான 14.4.2007 அன்று சென்னை மாநகரத்தில் தொடங்கப்பட்டு; இத்திட்டம் படிப்படியாக மே மாதம் முதல் வாரத்திலிருந்து தமிழகத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

***